[2002 மே 2

மாண்புமிகு திரு. வ.து. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே, பீடித் தொழிலாளர்களுடைய நலன் கருதி, வேலூரில் 679 வீடுகளும், திருச்சியில் 286 வீடுகளும், ஈரோடில் 89 வீடுகளும், நாமக்கல்லில் 55 வீடுகளும், கோயம்புத்தூரில் 48 வீடுகளும் திருவள்ளூரில் 128 வீடுகளும், மொத்தம் 1285 வீடுகள் கட்டுவதற்கு எங்கள் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, சேலம் நகர்பற்றி மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு யோசிக்கப்படும் என்பதைச் சொல்லி அமர்கிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 274, திரு. கி. பாரிமோகன், திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. ஐ. கணேசன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

274—

ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி

***633—திரு. கி. பாரிமோகன்:**
திரு. ஜி.கே. மணி:
திரு. ஐ. கணேசன்:

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி சுற்றுலாத் தலத்தை விரிவுபடுத்தவும், பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா ஒன்று உருவாக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியை விரிவுபடுத்தவும், பொழுதுபோக்கு அம்சம் கொண்ட பூங்கா ஒன்று உருவாக்கும் திட்டமும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2002 மே 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் சுற்றுலா மையம் என்பது ஒரு பிரசித்தி பெற்ற மையம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நம்முடைய அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்த பகுதி, பார்த்த பகுதி அது. எல்லோரும்—நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் இன்றும், கடந்த காலங்களில்கூட இவ்வளவு மக்கள்தொகை சுற்றுலாப் பயணிகளாக வரக்கூடிய இந்தப் பகுதியிலே அடிப்படை வசதிகளே இல்லையென்று சொல்லி நிறைய குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தச் சுற்றுலா மையம் என்பது ஒரு ஊராட்சியினாலே நிருவகிக்கக்கூடிய ஒரு பகுதி. அந்த ஊராட்சியிலே வருமானம் அதிகமாக இல்லை. இப்படி சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகிற காரணத்தினாலே அங்கே சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகிறது. அதைப் பராமரிக்க, சுகாதாரக் கேட்டை சீர்செய்வதற்குக்கூட நிதி இல்லாத சூழ்நிலை இருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் அந்த நீர்வீழ்ச்சியிலே குளித்துவிட்டு, சிலபேர் நீர்ச் சுழலில் சிக்கிக்கொண்டு இறக்கவும் நேரிடுகிறது. விபத்துக்கு உள்ளாகிறார்கள். அவர்களை எடுத்துச் செல்ல ஆம்புலன்ஸ் வசதி, மருத்துவமனை வசதிகூட இல்லாமல் இருக்கிறது. கர்நாடகம், ஆந்திரம், தமிழ்நாட்டினுடைய பல்வேறு மாவட்டங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய இந்தச் சுற்றுலா மையத்தை கடந்த காலத்திலே நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஓரளவு சீர் செய்தோம். ஆகவே இப்படி மக்கள் அதிகம் வரக்கூடிய இந்தப் பகுதியிலே, சுற்றுலாப் பூங்கா அல்லது பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்ட வேறுவிதமான பொழுதுபோக்குகள் எல்லாம் ஏற்படுத்துவதற்கு சுற்றுலாத் துறையின் மூலமாக கூடுதலான நிதியொதுக்கி, நடப்பாண்டிலே இந்தச் சுற்றுலா மையத்தை மேம்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல்லில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆலோசனையை ஏற்று ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் காவிரி ஆற்றின்

குறுக்கே தொங்கு பாலம் கட்டுவதற்கான பணி 1996 ஆம் ஆண்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவடைந்துவிட்டது. தொங்கு பாலம் மூலம் ஆற்றின் தீவுப் பகுதிக்குச் சென்று நீர்வீழ்ச்சியின் அழகை கண்டுகளிக்கலாம். இங்கே வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் மறு கரைக்குச் செல்ல நவம்பர் 1998 முதல் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். ஒகேனக்கல் அருகில் உடை மாற்றும் அறை மற்றும் கழிப்பிட வசதிகள் செய்து கொடுக்க ரூ.3,38,840 அனுமதிக்கப்பட்டது. இப்பணி தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் உபயோகத்திற்கு விடப்பட்டுள்ளது.

ஆண்கள் உடை மாற்றும் அறை கட்டப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் சுற்றுலா வளாகத்தில் சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையை ஏற்று பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் நவீன கழிப்பிடங்கள் செய்து கொடுப்பதற்காக, மத்திய அரசு ரூ.12 இலட்சம் மாநில அரசு ரூ.4 இலட்சம் சேர்த்து ஆக மொத்தம் ரூ.16 இலட்சம் திட்டச் செலவினம் ஆகும். மத்திய மாநில அரசுகளின் முதல் தவணை முறையே ரூ. 3.60 இலட்சமும், ரூ. 1.20 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 4.80 இலட்சமும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லில் நவீன கழிப்பிட வசதிகள் ரூ.75,600 செலவில் தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஒகேனக்கல் சுற்றுலா சுற்றுச்சூழல் மேம்பாட்டுப் பணிகளுக்கு மத்திய, மாநில அரசு நிதியுதவியுடன் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1995-96 ஆம் ஆண்டு ரூ.10.50 லட்சம் வழங்கப்பட்டு ஒகேனக்கல் பகுதியில் பார்வை மாடம், அணுகு பாதை மற்றும் சிறுவர் பூங்கா ஆகியவை அமைக்கப்பட்டு இவை வனத் துறை மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்பதை அவைக்குத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

திரு. ஐ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லில், அதாவது பெண்ணாகரம் தொகுதியிலே அமைந்துள்ள இந்த ஒகேனக்கல், கிட்டத்தட்ட 2, 3

2002 மே 2]

மாநில மக்கள், குறிப்பாக கர்நாடகம், தமிழ்நாடு, கேரளம் ஆகிய பல பகுதிகளிலிருந்து தினசரி ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்துகொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து அங்கே வனத் துறையால் பராமரிக்கப்படக்கூடிய அந்தப் பூங்காவிலே புல்கூட இல்லை. 15, 20 மான்களைப் போட்டு அடைத்து அவை மிகவும் நோய்வாய்ப்பட்டு, நலிந்து சித்திரவதைப்பட்டு, சீரழிந்து இருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் பார்த்தாரா அல்லது அதிகாரிகள் பார்த்தார்களா?

முற்பகல் 11--00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. கேள்வியை நீட்டிக்காமல் கொஞ்சம் முடித்துவிடுங்கள்.

திரு. ஐ. கணேசன்: அதேபோல் முதலைப் பண்ணை என்று ஒன்று வைத்து, நூற்றுக்கணக்கிலே இருந்த முதலைகள் இப்போது பலமடங்கு பெருகி, முதலைகளுக்கு உணவே அளிக்காமல், 10 நாட்கள் 15 நாட்களுக்கு ஒருமுறை உணவு அளித்து, அந்த மிருகங்களையும் சித்திரவதை செய்துகொண்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம் அரசு பரிசீலனை செய்து அந்த மிருகங்களுக்குச் சரிவர உணவை அளித்து, அங்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய வகையிலே நல்ல பூங்காவாக உருவாக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தைப் பரிசீலித்து, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையை ஏற்று, அதிகாரிகளை வரவழைத்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]